மிகவும் அவசரம் / தனிக்கவனம்

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 600 006

ந.க.எண். 048620 / எம் / இ4 / 2019, நாள் 25.08.2020.

பொருள்: பள்ளிக்கல்வி - திட்ட ஆண்டு 2020-21 - மத்திய அரசின் உதவித்தொகை திட்டம் - தேசிய வருவாய் வழி திறன் தேர்வு (National Means-cum-Merit Scholarship Scheme) தேர்ச்சி பெற்ற மாணவ / மாணவியர்களின் விண்ணப்பங்கள் இணையதளத்தில் 15.09.2020க்குள் பதிவேற்றம் செய்தல் - அறிவுரை வழங்குதல் - சார்பு.

பார்வை:

1. மத்திய கல்வித் துறையின் கடிதம் – மின்னஞ்சல் மூலமாக பெறப்பட்ட நாள். 13.08.2020.
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் மற்றும் NMMSS உதவித்தொகை பெறத்தகுதியான மாணவ 1மாணவியரின் பட்டியல், ந.க.எண். 048620 / எம் / இ4 / 2019, நாள். 18.07.2020

பார்வையில் கண்ட மத்திய கல்வித் துறையின் கடிதத்திற்கும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைக் கடிதத்திற்கும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் நடைபெற்ற NMMS தேர்வில் தேர்ச்சி பெற்று, NMMSS கல்வி உதவித்தொகை பெறத் தகுதிபெற்ற மாணவ மாணவியரின் பெயர்ப்பட்டியல் 20.07.2020 அன்று அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அப்பட்டியலில் இடம்பெற்றுள்ள, இந்த கல்வியாண்டில் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு National Scholarship Portal என்ற இணையதளத்தில் புதிதாக விண்ணப்பிக்குமாறும், மேலும், 10,11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் முந்தைய ஆண்டுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விண்ணப்பங்களை National Scholarship Portal என்ற இணையதளத்தில் (Renewal application) புதுப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தற்போது, National Scholarship Portal என்ற இணையதளம் 16.08.2020 முதல் இவ்விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யும் வகையில் தகவமைக்கப்பட்டுள்ளதாகப் பார்வையில்காண் மத்திய கல்வித்துறையின் மின்னஞ்சல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணியை வரும் 15.09.2020க்குள் முடிக்குமாறு தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளித்தலைமையாசிரியர்கள் மூலமாக மாணவர்களுக்கு அறிவுறுத்திடவும் இப்பொருள் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய தொடர்நடவடிக்கை மேற்கொள்ளவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக்கல்வி இயக்குநர்

25/8/20

பெறுநர்:

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.